17.03.2025 அ.வ. எண். 141/2017 பி.சா.2 சக்திவேல்

குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதியும் நானும் உறவினர்கள் தான். 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் குள்ளியம்மாள். குள்ளியம்மாளின் மருமகள் தான் வாதி. 1ம் பிரதிவாதி புதுப்பாளையத்தில் வசித்து வருகிறார். நான் ஆலத்தூரில் வசித்து வருகிறேன். வாதியும் ஆலத்தூரில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆலத்தூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து ஆதியில் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பட்டாவை 1984 ஆம் ஆண்டு வாதிக்கு கொடுத்ததாக வழக்கில் கூறியுள்ளார் என்றால் சரிதான். வாதிக்கும் அவருடைய கணவருக்கும் பட்டா கொடுத்ததால் தவறு என முடிவு செய்து குள்ளியம்மாளுக்கு பட்டா வழங்கியதாக வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். வாதி பெயருக்கு முதலில் பட்டா வந்தது தெரியாது, விசாலாட்சி பெயரில் ஆவணங்கள் இருந்தது பார்த்து தான் நான் வாங்கினேன். குள்ளியம்மாள் தாவா சொத்தில் தான் இருந்தார், அதை பார்த்து தான் வாங்கினேன். வாதி பெயரில் பட்டா இருந்ததற்கு ஊரில் இருந்தவர்களோ, குள்ளியம்மாளோ ஆட்சேபனை செய்தார்களா என்றால் தெரியாது. பி.சா.ஆ.2 குறித்து எனக்கு தெரியும். பட்டா கொடுக்க வேண்டும் என்று தான் மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்துள்ளார்கள். எல்லம்மாள் பெயருக்கு கொடுத்த பட்டா தவறு என்று பி.சா.ஆ.2ல் குறிப்பிடவில்லை. பி.சா.ஆ.2, 23.04.1984 ஆம் தேதி கொடுக்கப்பட்டதாக உள்ளது. குள்ளியம்மாள் பெயருக்கு 1990 ஆம் ஆண்டு தான் பட்டா வழங்கப்பட்டது. எல்லம்மாள் பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யப்பட்டதா இல்லையா என்று தெரியாது. வாதி பெயரில் இருந்த பட்டாவை குள்ளியம்மாள் மோசடியாக அவர் பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்றால் அந்த பாட்டி மோசடியாக வாங்கவில்லை என்று சொல்லியுள்ளார். குள்ளியம்மாளுக்கும் வாதிக்கும் பேச்சுவார்த்தையே இல்லாமல் இருந்தது. வாதி ஊரிலேயே இல்லை. வாதி செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையயில் நீதிமன்றத்தில் அ.வ.எண். 98/2006 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு

சொத்து வாங்கிய பிறகு தான் தெரியவந்தது. வாதி வழக்கு தாக்கல் செய்வதை அறிந்து தான் குள்ளியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கி 8 ஆண்டுகளுக்கு பிறகு தான் நான் கிரயம் வாங்கினேன். குள்ளியம்மாள் பெயரில் இருந்து பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு மாறவில்லை. குள்ளியம்மாள், 1ம் பிரதிவாதி வரி செலுத்தியதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. பி.சா.ஆ.5 வழக்கு நிலுவையில் இருந்தபோது என் பெயரில் மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை. மாட்டுக்கொட்டகை அமைத்து அனுபவித்து வருகிறேன். தாவா சொத்தை குள்ளியம்மாளோ, 1ம் பிரதிவாதியோ அனுபவித்ததே இல்லை என்றும் அதனால் நான் வாங்கிய கிரயம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிப்பதற்காக கிரய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. கிரய ஆவணங்கள் ஏற்படுத்திய விவரம் தெரிந்தவுடன் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு காலவரம்பு சட்டத்தின்படி பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் நான் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ளவாறு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.